

# இளம் குழந்தைப் பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சேவைகளில் உங்கள் குழந்தையின் நோக்குநிலையை ஆதரித்தல்

**TAMIL**

இளம் குழந்தைப் பருவக் கல்வியில் நேர்மறையான தொடக்கம் என்பது முக்கியம். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் வரவேற்கப்படுவதாக, பாதுகாப்பாக, ஆதரிக்கப்படுவதாக உணர்வது முக்கியம். சேவையின் முதல் நாட்கள், உங்கள் குழந்தை மற்ற குழந்தைகளை அறிந்து கொள்வதற்கும், அவரின் ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிற இளம் குழந்தைப் பருவத் தொழில் வல்லுநர்களுடன் நம்பகமான உறவைத் தொடங்குவதற்குமானது.

விக்டோரியாவிலுள்ள இளம் குழந்தைப்பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சேவைகள், *விக்டோரியன் இளம் வயதுக் கற்றல் மற்றும் மேம்பாட்டு கட்டமைப்பால்* (VEYLDF) வழிநடத்தப்படுகின்றன. குழந்தைகளின் அடையாளம் மற்றும் அவர்களின் குடும்பம் மற்றும் கலாச்சார வரலாறுகளானது அவர்களின் கற்றல் மற்றும் மேம்பாட்டை வடிவமைக்கின்றன என்பதைக் கல்வியாளர்களுக்கு இந்த கட்டமைப்பு தெரிவிக்கிறது. தங்களின் தனித்துவ அடையாளத்தை தொழில் வல்லுநர்கள் மதித்து ஏற்கும்போது குழந்தைகள் வரவேற்பை உணர்ந்து சிறப்பாகக் கற்றுக்கொள்கிறார்கள்' (VEYLDF, 2016, பக்கம். 12). இந்தப் புரிதலானது, கல்வியாளர்கள் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் அவர்களின் புதிய இளம் குழந்தைப் பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சேவையில் அவர்களின் நோக்குநிலை மற்றும் தீர்வுக் காலத்தின்போது ஆதரவளிக்கும் அணுகுமுறையை வலியுறுத்தும்.

இளம் குழந்தைப் பருவக் கல்வி மற்றும் பராமரிப்புச் சேவைகள், ஒரு தரமான திட்டத்தின் அடித்தளமாக கல்வியாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையேயான கூட்டுப்பணிகளைக் காண்கிறது. மரியாதைக்குரிய உறவுகள், தொடக்கத்தில் இருந்தே ஓர் உயர்தர சேவையின் வலுவான குறிகாட்டியாக உள்ளன. கல்வியாளர்கள் அன்பாகவும் வரவேற்பவராகவும் இருப்பார்கள் என்றும், உங்கள் குடும்ப மொழி[களின்] பயன்பாட்டை ஊக்குவிக்கலாம் என்றும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

நீங்கள் சரியான தகவலறிந்திருப்பதையும், உங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் மொழியில் கேள்விகளைக் கேட்பதற்கும் மேலதிகத் தகவல்களைத் தேடுவதற்குமான வாய்ப்பைக் கொண்டிருப்பதையும் உறுதிசெய்ய, ஒரு தொலைபேசி மொழிபெயர்ப்பாளர் சேவை மூலம் உங்களுடன் தொடர்புகொள்வதை சேவைகள் ஆதரிக்கலாம். கூடுதலாக, உங்கள் குடும்ப மொழியைப் பேசும் ஓர் ஆதரவுப் பணியாளர், உங்கள் குழந்தை சேவையில் ஒரு தொடர்பையும் உடனிருக்கும் உணர்வையும் வளர்த்துக் கொள்வதன் வாயிலாக குறுகிய காலத்திற்கு உதவக் கிடைக்கக்கூடும்.

தரமான இளம் குழந்தைப் பருவக் கல்வியானது குடும்பத்தினரை 'குழந்தைகளின் கற்றல் மற்றும் மேம்பாட்டில் முதன்மையான செல்வாக்குள்ளவர்' என்று அடையாளங்காண்கிறது (VEYLDF, 2016, பக்கம். 9). கல்வியாளர்கள், இளம் வயதினருக்கான திட்டத்தில் குடும்ப உள்ளீட்டையும் ஈடுபாட்டையும் மதிக்கிறார்கள் மற்றும் எதிர்நோக்குகிறார்கள். இது கல்வியாளர்களின் நடைமுறையைத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கு அவர்களின் கல்வி மற்றும் பராமரிப்புச் சூழல்களிலும் கற்றல் விளைவுகளை மேம்படுத்துகிற வீட்டுச் சூழல்களிலும் நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் தகவல்தொடர்பை வளர்க்கவும் உதவுகிறது. குடும்பத்தினர் சேவையில் ஈடுபடவும், ஆரம்ப அமர்வுகளில் கலந்து கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இது, உங்கள் குழந்தை பாதுகாப்பாக உணர உதவுவதுடன், உங்கள் குழந்தை நீங்கள் இல்லாமல் சேவையில் இருக்கும்போது அங்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

உங்களுடைய இளம் குழந்தைப் பருவச் சேவையில், உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் சேவைகள் குறித்து தெரிந்திருக்க உதவும் நோக்குநிலைத் திட்டம் இருக்கும். இதில் அடங்குபவை;

- முறையான வருகை தொடங்குவதற்கு முன்பு உங்கள் குழந்தையுடன் சேவையைப் பார்வையிடுதல்
- உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் வசதியாக இருக்க குறுகிய அமர்வுகளைத் தொடங்கி நீண்ட அமர்வுகளை உருவாக்குதல்.

உங்கள் இளம் குழந்தைப் பருவக் கல்வியாளர்கள் உங்களுடன் நேரத்தைச் செலவிடுவார்கள் மற்றும் உங்களைப் பற்றியும் உங்கள் குழந்தையைப் பற்றியும் சில கேள்விகளைக் கேட்பார்கள். இது அவர்களுக்கு உங்கள் குழந்தையின் தேவைகள் குறித்த சிறந்த புரிதலை வழங்கும் என்பதுடன், உங்கள் குழந்தைக்கு கற்றல் வாய்ப்புகளையும் நேர்மறையான விளைவுகளையும் அதிகரிக்கிற ஒரு திட்டத்தை உருவாக்க உதவுகிறது.

இளம் குழந்தைப்பருவச் சேவைகள் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கக்கூடிய தகவல்களின் உதாரணங்கள்:

- குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய தகவல் - தடுப்பூசிப் பதிவுகள், மருத்துவத் தேவைகள், பிணிகள் அல்லது ஒவ்வாமை.
- நேப்கின் மாற்றுவதற்கான விருப்பத்தேர்வுகள், கழிப்பறை விருப்பத்தேர்வுகள் மற்றும் வீட்டு நடைமுறைகள்.
- குழந்தைகள் உண்ணும் உணவுகள், உணவு நேரப் பழக்கவழக்கங்கள்/நடைமுறைகள்.
- குழந்தைகளின் ஓய்வு/தூக்கம் தொடர்பான தேவைகள்.
  - அவர்கள் கட்டிலில் தூங்குகிறார்களா, தங்கள் சொந்த படுக்கையில் தூங்குகிறார்களா அல்லது பெற்றோருடன் சேர்ந்து தூங்குகிறார்களா?
  - என்ன பாடல்கள் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடும்?
  - அவர்களிடம் விருப்பமான புத்தகம், சிறப்பு பொம்மை அல்லது போர்வை இருக்கிறதா?
  - அவர்கள் பொதுவாக பகலில் எந்த நேரத்தில் ஓய்வெடுக்கிறார்கள்/தூங்குகிறார்கள்?
- உங்கள் குடும்பத்திற்கு என்ன கொண்டாட்டங்கள் மற்றும் மரபுகள் முக்கியமானவையாக உள்ளன?
- நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் வேறு எந்தத் தகவலையும் கல்வியாளர்கள் வரவேற்பார்கள்.
- உங்கள் குழந்தையுடன் ஈடுபட உதவும் என்று கல்வியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமாய் நீங்கள் விரும்புகிற உங்கள் குழந்தையைப் பற்றிய தகவல்களும் உங்களிடம் இருக்கும்.

## உங்கள் குழந்தை, தனது இளம் குழந்தைப்பருவச் சேவையில் இருக்கும்போது அவருக்கு ஆதரவளிக்கும் மற்ற வழிகள்

- சேவையில் உங்கள் குழந்தையுடன் நேரத்தை செலவிடுங்கள் - சேவையின் நடைமுறைகளை உங்கள் குழந்தைக்கு விளக்குவது, விளையாடுவது, கதைகளைப் படித்துக் காட்டுவது மற்றும் உங்கள் சொந்த மொழியில் பாடல்களைப் பாடுவது.
- மற்ற குழந்தைகளுடன் தகவல்தொடர்பு கொள்ள அவர்களுக்கு உதவுங்கள். இது, மற்றவர்களுக்கு அருகில் அமருமாறு அவர்களை ஊக்குவிப்பது, உங்களை மற்ற குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவது, செயல்பாடுகளிலும் விளையாட்டுகளிலும் சேர்ப்பது ஆகியவற்றின் மூலமானதாகவும் இருக்கலாம்.
- உங்கள் குழந்தையுடனும் அதே மொழி பேசும் மற்றவர்களுடன் பேசுவதற்கு நேரம் செலவிடுங்கள்.
- என்ன அனுபவிக்கிறார் மற்றும் உணர்கிறார் என்பதைப் பற்றி உங்கள் குழந்தையுடன் பேசுங்கள்: அவரது அச்சத்தைப் போக்கி ஊக்குவித்திடுங்கள்.
- அவரது கல்வியாளர்கள் யார், அவர்களின் பெயர்கள், அவருக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் அவர்களிடம் செல்லலாம் என்பனவற்றை உங்கள் குழந்தை அறிந்திருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். உங்களுடன் சேர்ந்து அவரது கல்வியாளரின் பெயர்களைச் சொல்லி பயிற்சி பெறுவதற்கும், உதவி கேட்டு நடித்துக் காட்டுவதற்குமான வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுத்திடுங்கள்.
- புறப்படுவதற்கு முன்பு எப்போதும் விடைபெற்றுச் செல்லுங்கள், அத்துடன் நீங்கள் மீண்டும் வருவீர்கள் என்று கூறி உங்கள் குழந்தையின் அச்சத்தைப் போக்கிடுங்கள். நீங்கள் வெளியேறுவதற்கு முன்பு, ஒரு கல்வியாளர் மற்றும்/அல்லது மற்ற குழந்தைகளுடன் ஒரு செயலில் ஈடுபட உதவுவதன் மூலம் உங்கள் குழந்தையை ஆசுவாசப்படுத்துவது ஒரு சிறந்த யோசனையாகும்.
- குழந்தைகளிடம் இருக்கக்கூடிய ஏதேனும் கவலைகள் குறித்து கேள்விகளைக் கேட்பதற்கும், அவற்றிற்கு நீங்கள் பதிலளிப்பதற்குமான வாய்ப்பை அவர்களுக்குக் கொடுக்கும் வகையில், அவர்கள் இங்கு வருவதற்கு முன், இரவு/காலையில் சேவையின் நடைமுறைகள் மற்றும் சூழலைப் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- நீங்கள் சேவையில் இருக்கும்போது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஆதரவாக உங்கள் குழந்தையின் ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

---

**மேற்கோள்கள்**

கல்வி மற்றும் பயிற்சித் துறை, 2016. *விக்டோரியன் இளம் வயது கற்றல் மற்றும் மேம்பாட்டுக் கட்டமைப்பு.*